பக்கங்கள் 19+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 16 வெள்ளிக்கிழமை 30.01.2026 | அதிர்வு 184

## இலங்கை வருகின்றார் ஐ.எம்.எவ். பணிப்பாளர்



சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் 02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளம் அதிகரிப்பு!

## ஒப்பந்தம் இன்று கைச்சாத்து

(பார்த்தீபன் சண்முகநாதன்)

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,750 ரூபாவாக அதிகரிப்பதற்கான வரலாற்று முக்கியத்துவமிக்க ஒப்பந்தம் இன்று காலை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சில் வைத்து கையெழுத்திடப்பட்டது.

2026 வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைவாக, தற்போது 02▶

# சுயநிர்ணய உரிமையுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்து



தேசிய இனப்பிரச்சினைக்குச் சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் விசேட கூட்டமொன்றை அந்தக் கட்சி எதிர்வரும் 13ஆம் திகதி யாழ். நல்லூரில் நடத்துகின்றது.

கட்சித் தலைவரான சிறிதுங்க ஜயசூரிய சிறப்பு பேச்சாளராக பங்கேற்று, தமிழ் மக்களுக்குக் கௌரவமானதொரு தீர்வை வழங்குமாறு வலியுறுத்தவுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், வடக்கு மீன சமூகத்தின் பிரச்சினைகள் உடன் தீர்க்கப்பட வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்படவுள்ளது.

## வடக்கில் இடம்பெற்ற

# ஊடகவியலாளர்கள் கொலை: விசாரணைகள் துரிதகதியில்!

## ஆதாரங்களும் கிடைத்துள்ளன; இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு



வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் படுகொலை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் ஆக்கப்படல்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த விசாரணைகளின் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுடன், ஆதாரங்களும் கிடைத்துள்ளன.

எனவே, இந்த விடயம் தொடர்பில் விரைவில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் எமது அரசாங்கம் விசாரணை நடத்தியே தீரும்.” – என்றார்.



# திஸ்ஸ விகாரைக்கு எதிராக நாளை மீண்டும் போராட்டம்!

தையிட்டி திஸ்ஸ விகாரையை உடனடியாக அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் நாளையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் திஸ்ஸ விகாரைக்கு அருகாக போராட்டம் இடம்பெறவுள்ளது.

நாளை மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரையும், பௌர்ணமி நாளான நாளைமறுதினம் காலை 7 மணிமுதல் மாலை 6 மணி வரையும் போராட்டம் நடைபெறும்.

இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு போராட்ட ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தோட்டத் தொழிலாளர்களுக்கு...

1,350 ரூபாவாகக் காணப்படும் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 400 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த 400 ரூபா அதிகரிப்பில் 200 ரூபாவை அந்தந்தப் பிராந்திய தோட்ட நிறுவனங்களும், மிகுதி 200 வை அரசும் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, தோட்டத் தொழிலாளர் ஒருவரின் நாளாந்த சம்பளம் 1,750 ரூபாவாக உயர்வடையும்.

தோட்ட நிறுவனங்கள் மற்றும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் நடத்தப்பட்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது என்று அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

“ஜனவரி மாதம் தொழிலாளர்கள் பணிக்குச் சமூகமளித்த நாட்களின் அடிப்படையில், பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் இந்த அதிகரிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படும்.

அரசு வழங்கும் 200 ரூபா கொடுப்பனவை வைப்பிலிடுவதற்காகத் தொழிலாளர்களின் வங்கித் தகவல்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதியளவில் ஊழியர்களின் வருகைப் பதிவேடுகள் கிடைத்தவுடன், அரசின் பங்களிப்புத் தொகையை நிறுவனங்களுக்கு விடுவிக்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானத்தை ஒரு வரலாற்றுச் சாதனையாகக் கருதுவதாகப் பெருந்தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுனில் பொலியத்த குறிப்பிட்டார்.

இந்தச் சம்பள அதிகரிப்பால் தோட்ட நிறுவனங்களுக்கு 6 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மேலதிகச் செலவு ஏற்படும் என்றும், எனவே இந்தத் தொழில் துறையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் மற்றும் அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### இலங்கை வருகின்றார்...

மேற்கொள்ளவுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிரிவின் பணிப்பாளர் கிருஷ்ணா சிறிநிவாசன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தப் பயணம் சர்வதேச நாணய நிதியத்தின், இலங்கை தொடர்பான திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர், அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தரம் ஆறு கல்வி மறுசீரமைப்புக் குழுவுக்கு யாழ். பல்கலை துணைவேந்தர் நியமனம்!



தற்போது தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, சர்சைக்குள்ளாகிய நிலையில் பிற்போடப்பட்டுள்ள பாடத்திட்ட – கல்வி மறுசீரமைப்பு குறித்த, சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து, அதனைச் செயற்படுத்துவதற்குப் பொருத்தமான திட்டவரைவை முன்மொழிவதற்காக நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவினால் இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த 27 ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் வழங்கிய வழிகாட்டல்களின் அடிப்படையில், பாடத்திட்ட – கல்விச் சீர்திருத்தப் பணிகளை முன்னெடுக்கவென விசேட நிபுணர் குழு ஒன்றை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமரின் ஆலோசனையின்படி, தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபைத் தலைவர் பேராசிரியர் பிரியங்கனி சேனநாயக்க தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபையின் முன்னாள் தலைவர் கலாநிதி உபாலி மாம்பிட்டிய, முன்னாள் உறுப்பினரும், கொழும்புப் பல்கலைக் கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் மொஹமட் மஹீஸ் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் பத்மசிறி ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் பெப்ருவரி 03 ஆம் திகதி தேசிய கல்வி நிறுவகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



# ஐ.ம.ச. மாநாட்டுக்கு முன்னர் ரணில் – சஜித் நேரில் சந்திப்பு!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் விரைவில் சந்திப்பு நடைபெறவுள்ளமை உறுதியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி உதயமாகி எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் ஆறாண்டுகள் ஆகின்றன.

அதற்கு முன்னதாக இருவரும் நேரடிச் சந்திப்பில் ஈடுபடுவார்கள் எனத் தெரியவருகின்றது.

இதன்போது எட்டப்படும் முடிவுகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் எனவும் அறியமுடிகின்றது.

இரு கட்சிகளும் இணைவுக்கு இணங்கி இருந்தாலும் தனிக்கட்சியா, கூட்டணியா என்பது பற்றி இன்னும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை.

எனவே, ரணிலுக்கு சஜித்துக்கும் இடையிலான சந்திப்பே அடுத்த கட்டத்தை நிர்ணயிக்கும் என கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# தீக்காயங்களுக்கு உள்ளாகி மூதாட்டி நேற்று உயிரிழப்பு!

## குப்பைக்குத் தீவைத்தபோது விபரீதம்

குப்பை கொழுத்தியபோது, தவறுதலாக வீட்டின் மீது தீ பற்றியதால் எரிகாயங்களுக்கு உள்ளான மூதாட்டி, சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

அரியாலை பகுதியைச் சேர்ந்த பரமசிவம் பரமேஸ்வரி (வயது 81) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:–

கடந்த 17ஆம் திகதியன்று குப்பை கொழுத்தியபோது தீ வீட்டின் மீது பற்றியதால், அந்த மூதாட்டி காயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

இதையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

# இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு அழைப்பு இல்லை



இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின விழாவுக்கு வெளிநாடுகளில் இருந்து பிரமுகர்கள் அழைக்கப்படவில்லை. ஜனாதிபதி தலைமையிலேயே நிகழ்வுகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின விழா எதிர்வரும் 4ஆம் திகதி ‘கட்டியெழுப்புவோம் இலங்கையை’ எனும் கருப்பொருளின் கீழ் சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

இதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி துறை அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன, அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர் ஊடக சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது வெளிநாட்டுப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனரா என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன,

“கொழும்பிலுள்ள தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திரிகள் மற்றும் வெளிவிவகாரத்துறையுடன் தொடர்புடையவர்கள் பங்கேற்பார்கள். வெளிநாடுகளில் இருந்து பிரமுகர்கள் அழைக்கப்படவில்லை.” – என்று குறிப்பிட்டார்.



## 2 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான

# போதைப்பொருள்களுடன் மாமா, மருமகன் சிக்கினர்!







**(பாறுக் ஷிஹான்)**

2 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களைச் சூட்சுமமாக வீடுகளில் பதுக்கி வைத்திருந்த இரண்டு சந்தேகநபர்களைச் சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியின் ஊடாக, கொழும்பிலிருந்து கல்முனை வழியாக சம்மாந்துறைப் பகுதிக்குச் சென்ற அதிசொகுசு பஸ்ஸில் ஒன்றில், நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கைது செய்யப்பட்ட 49 வயதுடைய சந்தேகநபரின் வாக்குமூலம் மற்றும் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி கே.என்.ஆர். பெரேராவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், சம்மாந்துறை, புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள இரண்டு வீடுகளில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கைகள், கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸாரின் ஆலோசனையின் பேரில், ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் பல்வேறு குற்றச் செயல்கள் பிரிவின் பதில் பொறுப்பதிகாரியுமான என்.ரிபாய்டீன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இரண்டு வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பல்வேறு வகையான போதைப்பொருட்களுடன் மாமா மற்றும் மருமகன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களின் வசமிருந்து குஷ், கேரளா கஞ்சா, ஐஸ், ஹெரோயின் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப் பொருட்கள், கைபேசிகள் மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியன மீட்கப்பட்டன.

சோதனை நடவடிக்கையின் போது, இரு வீடுகளிலும் அதிகளவான சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மாமா, மருமகன் உறவு முறை எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

47 மற்றும் 68 வயதுடைய இவ்விரு சந்தேகநபர்களும், சம்மாந்துறைப் பகுதியில் நீண்டகாலமாகப் போதைப் பொருட்களை விற்பனை செய்து விநியோகித்து வந்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும், இந்தச் சோதனை நடவடிக்கையின் போது பெருமளவான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் பணிப்புரையின் பேரில், அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் உத்தரவின்படி, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரி ஆராய்ச்சி மற்றும் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸார் ஆகியோர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு நேரில் சென்று, இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பாராட்டியதுடன், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கினர்.

இதனுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களைச் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், பெரியநீலாவணை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கொழும்பு – கல்முனை பஸ் தொடர்பான அதிரடி சோதனை நடவடிக்கையின் தொடர்ச்சியாக, சம்மாந்துறை வரை விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, போதைப்பொருள் வலையமைப்பு முறியடிக்கப்பட்டு பல்வேறு வகையான போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## நமது கருத்து

# புற்றுநோய் ஆபத்து!

இலங்கையில் ஒவ்வொரு நாளும் சுமார் நூறு புதிய புற்றுநோயாளர்கள் பதிவு செய்யப்படுகின்றனர் எனவும், நாள் ஒன்றுக்கு நாற்பது பேர் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் எனவும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

புகையிலை பயன்பாடு, மது அருந்துதல், டீசல் வெளியேற்றம், பிளாஸ்டிக் எரித்தல் மற்றும் பன்றி இறைச்சி உள்ளிட்ட சிவப்பு இறைச்சியை உட்கொள்வது போன்ற உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுடன் இந்த அதிகரிப்பைத் தொடர்புபடுத்தி, இவையே புற்றுநோய்த் தாக்கம் அதிகரிப்புக்குக் காரணம் என தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தலைவர் டாக்டர் ஹசரேலி பெர்னாண்டோ, நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

பெப்ரவரி நான்காம் திகதி இடம்பெறும் உலகப் புற்றுநோய்த் தினத்தைக் குறிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சமயமே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

2022 ஆம் ஆண்டில் மட்டும் 35,855 புதிய புற்றுநோயாளர்கள் பதிவாகியிருந்தனர். அதே நேரத்தில் 2021 ஆம் ஆண்டில் 14,986 புற்றுநோய் தொடர்பான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தரவுகளின்படி, 19,500 பெண்கள் மற்றும் 16,400 ஆண்கள் புற்றுநோயால் அப்போது பாதிக்கப்பட்டுள்ளனர்.

தரவுகளின்படி, ஆண்களிடையே மிகவும் பொதுவானது வாய்ப் புற்றுநோய் ஆகும். அதே நேரத்தில் மார்பக புற்றுநோய் பெண்களிடையே மிகவும் பொதுவானது. அடுத்ததாக மிகவும் பொதுவானது தைராய்டு புற்றுநோய் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் ஆகும்.

உலக சுகாதார நிறுவனம் 30 முயல் 50 வீதமான புற்றுநோய்களை சிகிச்சை மூலம் தடுக்க முடியும் என்று மதிப்பிட்டுள்ளனர் என வைத்தியர் ஹசரேலி பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

வயது, பாலினம், குடும்ப வரலாறு மற்றும் மரபியல் ஆகியவை புற்றுநோய்க்கான முக்கிய ஆபத்துக் காரணிகளாகும்.

அதிகரித்த மரபணு மாற்றங்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் காரணிகள் நீண்டகாலமாக நீடித்தல் என்பன இலங்கையில் புற்றுநோய் விகிதம் அதிகரிப்பதற்கு பங்களிக்கின்றன என்றும் டாக்டர் ஹசரேலி பெர்னாண்டோ மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் பிறழ்வுகள் குவிந்து, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, புற்றுநோய் காரணிகள் நீடிக்கின்றமையால் காலப்போக்கில் நாட்டின் வயதான மக்கள் தொகை தவிர்க்க முடியாமல் புற்றுநோய் பாதிப்புக்கு ஆளாக நேரிடும் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

புற்றுநோயால் தினசரி இறப்பு எண்ணிக்கை மேலும் உயரும் முன், புகையிலை மற்றும் மதுப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டின் வெளிப்பாட்டைக் குறைக்கவும், ஆரோக்கியமான உணவு முறைகளைப் பின்பற்றவும் உடனடி பொது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

இலங்கை சமூகம் விரைந்து கவனத்தில் எடுத்து பதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயம் இதுவாகும்.

### கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக

# மக்கள் தன் எழுச்சி கொள்ளவேண்டும் ஆயிரக்கணக்கில் அணிதிரளவேண்டும்!

### அழைப்பு விடுத்துள்ளார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

மகாவலி அதிகாரசபையின் எல் வலயத்தால் முன்னெடுக்கப்படும் தமிழர்களின் இனப்பரம்பல் கோலத்தை மாற்றியமைக்கும் 'கிவுல் ஓயா' திட்டத்துக்கு எதிரான போராட்டம் எதிர்வரும் 02 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கு மக்கள் ஆயிரக் கணக்கில் தன்னெழுச்சியாக அணி திரளவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிராக எதிர்வரும் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள போராட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.



குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழர்களுடைய பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகவே நாங்கள் போராடுகின்றோம்.

இந்த உரிமைசார் போராட்டத்தில் பெருந்திரளான தமிழ்மக்கள் தன் எழுச்சியுடன் பங்கேற்கவேண்டும்.

வவுனியா வடக்குப் பிரதேசத்திலேயே இத்தகை கிவுல் ஓயா திட்டத்துக்கான பாரிய நில அபகரிப்பு இடம்பெறுவதால் வவுனியா வடக்கு பிரதேசத்திலுள்ள அனைத்து தமிழ் மக்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நாம் தமிழ், முஸ்லிம், சிங்களம் என நாம் இங்கு இனவாதத்தையோ பிரிவினைகளையோ ஏற்படுத்த முயலவில்லை. எமது தமிழ் மக்களுக்கு உரிய பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகவே நாம் போராடுகின்றோம்.

இவ்வாறு எமது தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை ஒருபோதும் எம்மால் அனுமதிக்கமுடியாது. எனவே எமது பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு இனப்பரம்பல் கோலங்களை மாற்றியமைக்கும் இவ்வாறான திட்டங்களை எதிர்த்து மன உறுதியோடு நாம் அனைவரும் போராடவேண்டும்.

வவுனியா வடக்கு பிரதேசம் தமிழர்களிடம் இருந்து பறிபோகாமல் இருக்க வேண்டும் என்றால் இந்தப் போராட்டத்தில் வவுனியா வடக்கிலுள்ள தமிழ் மக்கள் கலந்துகொள்ள வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

வவுனியா வடக்குப் பிரதேச சபை என்பது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆட்சியில் இருக்கும் ஒரு பிரதேச சபையாகும்.

எனவே வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் தமிழ்த் தேசியத்தோடு பயணிக்கும் ஒவ்வாரு பிரதேச சபை உறுப்பினர்களும் இந்த போராட்டத்தை வலுப்படுத்துவதற்கு உரிய பங்களிப்புக்களைச் செய்யவேண்டிய பொறுப்பிருக்கின்றது.

எமது பூர்வீக நிலத்தைப் பாதுகாப்பதற்காக நாம் ஜனநாயகவழியில் போராடுவதற்கு எவராலும் எவ்வித தடைகளையும் ஏற்படுத்த முடியாது. எனவே இந்தப் போராட்டத்தை முழு வீச்சுடன் மேற்கொள்வதற்கு நாம் எம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும்.

எமது பூர்வீகநிலம் அபகரிக்கப்படுவதை தடுப்பதற்கு போராட்டமே ஒரே வழியாகும். ஆகவே நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளவேண்டும்.

இந்தப் போராட்டத்தில் ஆயிரத்துக்கும் மேலான மக்களை அணிதிரட்டிப் போராடுவதற்கு நாம் அனைவரும் உரிய தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ளவேண்டும்.

வவுனியா வடக்குப் பிரதேசத்தைப் பாதுகாக்க நாம் அனைவரும் அணிதிரள்வோம்.- என்றுள்ளது.

# வெருகல் பிரதேச செயலாளர் பிரிவு கிராமங்கள் யானைகளால் பாதிப்பு!

### அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உப்பூறல், சீனன் வெளி, நல்லூர் ஆகிய கிராமங்களில் கடந்த இரண்டு மாதங்களாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றது. காட்டு யானைகளின் தொல்லைகளால் பயன்தரும் தென்னை மரங்கள் அழிக்கப்படுவதுடன் வீடுகளையும் யானைகள் துவம்சம் செய்து வருகின்றன.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்டச் செயலாளர் சின்னமோகன் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக உப்பூறல் கிராமத்தில் 50 இற்கும் மேற்பட்ட பயன் தரும் தென்னைமரங்களையும், 6 இற்கும் மேற்பட்ட வீடுகளையும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன. அத்தோடு வீட்டிலிருந்த வீட்டு உபகரணங்களையும் யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

யானைகளால் சேதமாக்கப்பட்ட வீடுகளுக்கு இதுவரையும் அரசால் நஷ்டஈடுகள் கூட வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இது விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு யானைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்க முன் வரவேண்டும். நிரந்தரத் தீர்வாக யானை வேலிகள் அமைக்கப்படவேண்டும். மக்கள் என்ன



செய்வதென்று தெரியாமல் அச்சத்தில் வாழ்கின்றனர். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இந்த விடயத்தில் உடன் கவனம் எடுத்து நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுங்கள்.- என்றார்.

# இந்தியாவில் நடந்த கராத்தே, சிலம்பப் போட்டிகளில் இலங்கைக்கு 26 தங்கம், 4 வெள்ளிக் கிண்ணங்கள்!










இந்தியாவில் கடந்த 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டிகளில் இலங்கையில் இருந்து கலந்து கொண்ட சர்வதேச சிவலீமன் சிலம்பம் மற்றும் பாபு இஷின்ரியூ கராத்தே பாடசாலைக்கு 26 தங்கக் கிண்ணங்களும் 4 வெள்ளிக் கிண்ணங்களும் கிடைத்துள்ளன.

இந்தியா, இலங்கை, மலேசியா, டுபாய், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து 1500 இற்கும் அதிகமான மாணவர்கள் இதில் பங்குபற்றியிருந்த நிலையில் எமது இலங்கை சார்பாகச் சர்வதேச சிவலீமன் சிலம்பம் மற்றும் பாபு இஷின்ரியூ கராத்தே பாடசாலையில் இருந்து சூசைநாதர் யசோதரன் (பாபு ஆசான்) தலைமையில் 5 மாணவர்கள் பங்குபற்றினர்.

இந்த மாணவர்களே அங்கு போட்டிகளில் பங்குபற்றி இந்த வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர்.

யசோதரன் தனுஷன் – 07 தங்கக் கிண்ணங்கள் பஸ்ரியன் றயீவ் – 05 தங்கக் கிண்ணங்கள், ரவீந்திரன் டிலக்சினி -03 தங்கக் கிண்ணங்கள், 01 வெள்ளிக் கிண்ணம், வினோதன் பகலவன் – 06 தங்கக் கிண்ணங்கள், 01 வெள்ளிக் கிண்ணம், சற்குணராஜா பிரவீன்– 05 தங்கக் கிண்ணங்கள் 02 வெள்ளிக் கிண்ணங்கள் என மொத்தமாக 26 தங்கக் கிண்ணங்களையும் மற்றும் 04 வெள்ளிக் கிண்ணங்களையும் பெற்றுள்ளனர்.

இவர்களது வெற்றியானது எமது கழகத்துக்கும் இலங்கைக்கும் பெருமை சேர்த்துள்ளது என்று சர்வதேச சிவலீமன் சிலம்பம் மற்றும் பாபு இஷின்ரியூ கராத்தே பாடசாலை ஆசான் சூசைநாதர் யசோதரன் தெரிவித்துள்ளார்.

# சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியை '1சி' பாடசாலையாகத் தரமுயர்த்துங்கள்!

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை




வவுனியா சிதம்பரபுரம் ஶ்ரீ நாகராஜா வித்தியாலயத்தை தரம் '1 சி' பாடசாலையாகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலயமானது தற்போது தரம் 2 பாடசாலையாக இயங்கிவருகின்றது. 1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சுமார் 4 ஏக்கர் விஸ்தீரணமுடைய குறித்த பாடசாலையில் தற்போது 615 வரையிலான மாணவர்கள் கற்கின்றனர். 32 ஆசிரியர்கள் உள்ளடங்கலாக 35 பேர் பணிபுரிகின்றனர்.

இங்கு தரம் 12, 13 வகுப்புக்கள் 3 ஆண்டுகளாக இடம்பெற்ற போதிலும் கல்வி திணைக்களத்தின் அனுமதி கிடைக்காமையால் கல்விகற்ற மாணவர்கள் அருகிலுள்ள கோமரசங்குளம் மகா வித்தியாலயத்தில் பரீட்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். தூரம் மற்றும் அமைவிடத்தின் அடிப்படையில் இந்தப் பாடசாலையில் தரம் 12,13 வகுப்புக்களை ஆரம்பிக்கவேண்டியுள்ளமை காலத்தின் தேவையாகும்.

மேற்படி பாடசாலையினை தரமுயர்த்துதல் தொடர்பில் வவுனியா பிரதேச அபிவிருத்திக்குழு மற்றும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களிலும் நான் கோரிக்கை முன்வைத்திருந்தேன்.

மிகவும் அதிகஸ்ர பகுதி மாணவர்களை கொண்ட இந்தப் பாடசாலையைக் குறித்த பகுதியின் நலனைக் கருத்தில் கொண்டும் மாணவர்களின் சிறந்த கற்றல் நடவடிக்கையின் பொருட்டும் தரம் 1சி பாடசாலையாக தரமுயர்த்த ஆவன செய்யுமாறு தங்களை கேட்டுக்கொள்கின்றேன்.-என்றுள்ளது.

# நாவிதன்வெளி பிரதேச கலைஞர்கள் சுவதம் விருது வழங்கிக் கௌரவிப்பு





**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கலைஞர்களுக்கு சுவதம் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அம்பாறை மாவட்ட செயலகம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துடன் இணைந்து கலைஞர் சுவதம் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நாவிதன்வெளியில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு இதன்போது விருது வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப் ஏ.எல்.எம்.ஷினாஸின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கலைஞர்களுக்கான விருதை வழங்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்ஸான், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திலகராணி கிருபைராஜா உட்பட அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

2025ஆம் ஆண்டு கலைஞர் சுவதம் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட நாட்டுக்கூத்து கலைஞர் மிக்கேல் பெர்னாண்டோ, இலக்கியத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட ரெட்ணம் சுவாகர், பாரம்பரிய பொல்லடிக்கலை பங்களிப்புக்காக தெரிவு செய்யப்பட்ட மீரா சாஹிபு றஹூப் ஆகியோருக்கு இங்கு "சுவதம்" விருது வழங்கப்பட்டது.



# பசறை வலயத்தில் கால்கோள் விழா!

(நடராஜா மலர்வேந்தன்,
பசறை நிருபர்)

2026 ஆம் ஆண்டு முதலாந் தர மாணவர்களை பாடசாலைகளில் உள்ளீர்க்கும் கால்கோள் விழா நேற்று பசறை கல்வி வலயத்தில் எல்டெப் கலையருவி தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் தனபாலசிங்கம் கிங்ஸ்டன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது எல்டப் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் சமய வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது. விழாவில் புதிய மாணவர்களை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாலையிட்டு வரவேற்றனர். அத்தோடு இரண்டாந்தர மாணவர்களின் வரவேற்பு நிகழ்ச்சிகளும் நேர்த்தியாக நடைபெற்றன.











# காந்தியின் 78ஆவது சிரார்த்த தினம் இன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியின் 78 ஆவது சிரார்த்த தினம் இன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப் பட்டது.

யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகம் ஏற்பாடு செய்த இந்த நினைவு நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சிலைக்கு இந்திய துணை தூதர் சாய் முரளி மலர் மாலை அணிவித்து நினைவு கூர்ந்தார்.

வாழ்நாள் பேராசிரியர் மோகன் தாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப் பாளர் ரீ. சத்தியமூர்த்தி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சொல்லருவி லலிசன், மறவன்புலவு சச்சிதானந்தம், காந்தி சேவா நிலைய அங்கத்தவர்கள், யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரக அதிகாரிகள் என பலர் கலந்து கொண் டிருந்தனர்.

இதன்போது காந்தி சேவா நிலையத் தால், காந்தி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தமையை நினைவு கூர்ந்து வருடா வருடம் வெளியிடப்படும் காந்தியம் பத்திரிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

பத்திரிகையை வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வெளியிட்டு வைத்து காந்தி நினைவு நிகழ்வுக்கு வருகைதந்திருந்தோருக்கு வழங்கி வைத்தார்.

இதன் போது உரையாற்றிய யாழ். இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி,

காந்தியின் உண்மை, சத்தியம், அவரின் வாழ்க்கைத் தத்துவங்கள், கோட்பாடுகள் தற்போது உள்ளவர்களுக்கு தேவையான ஒன்றாக காணப்படுகின்றன. உலகத்தில் வாழும் மக்கள் காந்தியின் வழிகளை பின்பற்றி சத்தியத்தின் நேர்மையில் வாழ்வது சிறந்தது.

காந்தியவர்கள் இறக்கும்வரை சத்தியம், நேர்மை ஆகியவற்றை கடைப் பிடித்து வாழ்ந்தவர். அவரை நாங்கள் நினைவு கூர்ந்து அனுஷ்டிக்க இதுவே காரணம். வாழ்க்கையில் எந்த ஒரு துன்பம் வந்தாலும் சத்தியம், உண்மை ஆகியவற்றை நாங்கள் கைவிடக் கூடாது. இறுதிவரை தர்மமே நிலை நிற்கும்.– என்றார்.















# கடுமையான மணல் பற்றாக்குறையை வடக்கு மாகாணம் எதிர்கொண்டுள்ளது

## தேசிய நிர்மாண சங்க வடமாகாணத் தலைவர் நந்தரூபன் தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

வட மாகாணம் தற்போது கடுமையான மணல் பற்றாக்குறை என்ற மிகப் பெரிய நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது என்று இலங்கை தேசிய நிர்மாண சங்க வடமாகாண கிளைத் தலைவர் ந.நந்தரூபன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட மாகாணம் தற்போது கடுமையான மணல் பற்றாக்குறையை எதிர்கொண்டு வரகின்றது. இந்த நிலைமை வீடமைப்பு, அரச அபிவிருத்தித் திட்டங்கள், தனியார் கட்டுமானங்கள் மட்டுமல்லாது, கட்டுமானத் துறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்வாதாரம் கொண்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும் கடுமையாகப் பாதித்து வருகிறது.

ஒரு அடிப்படைக் கட்டுமானப் பொருளான மணல் இன்று சட்டபூர்வமான வழிகளில் கிடைக்காத நிலைக்கும், தாங்க முடியாத விலைக்கும் சென்றுள்ளது. அதே நேரத்தில், சட்டவிரோத சந்தைகளில் மணல் மிக உயர்ந்த விலைக்கு இலகுவாக கிடைப்பது, ஒழுங்குமுறை, கண்காணிப்பு மற்றும் நிர்வாகத் தோல்விகளைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இது மணல் மாபியாவைக் கட்டுப்படுத்த முடியாததாலோ, நிர்வாகப் பலவீனங்களாலோ, அல்லது நிறுவனத் தோல்வியாலோ ஏற்பட்டிருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், வட மாகாண அபிவிருத்தி நேரடியாக முடக்கப்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

இதற்கு உடனடித் கட்டமைப்பு தீர்வுகள் எடுக்கப்படவேண்டியது அவசியம்.

பொறியியலாளர்களாக, பிராந்திய அபிவிருத்தியை நேரடியாக பாதிக்கும் பிரச்சினைகளில் தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டியது எங்களின் கடமை என நாங்கள் நம்புகிறோம்.

அதன் அடிப்படையில் ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒழுங்குபடுத்தப்பட்ட மணல் யாட்டுகளை (Sand Yards) அமைக்க வேண்டும்.

இத்தகைய மணல் யாட்டுகள் மணல் விநியோகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய, அநியாய விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்த, .சட்டவிரோத மணல் விநியோகத்தையும் லஞ்சங்களையும் உடைக்க, அனுமதிக்கப்பட்ட கட்டுமானங்களுக்கு தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்ய உடனடி தேவையாகும்.

அதே நேரத்தில், தொடர்ந்து ஆற்றுமணலையே சார்ந்து செயல்படுவது நிலைத்தன்மையற்றதும், தொழில்முறை ரீதியாகப் பொறுப்பற்றதுமான செயல் என்பதைத் தெளிவாகக் கூற வேண்டியுள்ளது.

இன்றே கிடைக்கக்கூடிய, தொழில்நுட்ப ரீதியாக நிரூபிக்கப்பட்ட மாற்றுத் தீர்வுகளை உடனடியாக ஊக்குவிக்க வேண்டும். அதில் முக்கியமாக, ஆற்றுமணலுக்கு நேரடி மாற்றாகக் கட்டுமான முறைகள் மணல் பயன்பாட்டை பெரிதும் குறைக்கும்.

இலகுரக கற்கள் மற்றும் நவீன பிளாஸ்ரர் முறைகளைப் பயன்படுத்தலாம். பிற நாடுகளில் பயன்படுத்தப்படும் Tokyo Supercast Plaster Master போன்ற, மணல் பயன்பாட்டை குறைக்கும் அல்லது மணல் தேவையற்ற புதுமையான கட்டுமானப் பொருள்கள் அனைத்தும் உலகளவில் பயன்பாட்டில் உள்ளவை.

இங்கு குறைவாக இருப்பது கொள்கை வழிகாட்டலும், தொழில்முறை ஒப்புதலும், நிறுவனத் தைரியமும் ஆகும்.

இலங்கை பொறியாளர் சங்கம் போன்ற அமைப்புகள், இந்த நிலையில் தொழில்நுட்ப வழிகாட்டுதலையும், கொள்கை தாக்கத்தையும் வழங்க வேண்டிய தார்மீக மற்றும் தொழில்முறை பொறுப்பை கொண்டுள்ளன.

இந்தப் பிரச்சினையில் பொறியாளர்கள் முன்னணியில் வராவிட்டால், முக்கிய முடிவுகள் தொழில்நுட்ப அறிவு இல்லாத, சுயநலக் குழுக்களின் கைகளில் தொடர்ந்தும் இருந்து, நீண்ட கால அபிவிருத்திக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தும்.

மேலும் தாமதமின்றி உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகளையும், கொள்கையமைப்பாளர்களையும், தொழில்முறை நிறுவனங்களையும் வலியுறுத்துகிறோம்.

ஒரு அடிப்படை வளம் அபிவிருத்திக்குத் தடையாக மாறும் நிலையை, வடமாகாணம் இனி சகிக்க முடியாது.- என்றுள்ளது.

# ஹட்டன் பழைய சந்தை மீளமைத்து வியாபாரிகளிடம் வழங்க நடவடிக்கை






(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

பல வருடங்களாக பாழடைந்த நிலையில் காணப்பட்ட ஹட்டன் நகரிலுள்ள பழைய வர்த்தகத் தொகுதி (பழைய மார்க்கெட்) உடனடியாக புனரமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வர ஹட்டன் டிக்கோயா நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, சந்தையை நவீனமயமாக்கும் முதற்கட்ட பணிகள் நேற்று பிற்பகல் ஹட்டன் டிக்கோயா நகரசபை தலைவர் அசோக கருணாரத்ன மற்றும் நகரசபை அதிகாரிகளின் பங்களிப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பழைய வர்த்தகத் தொகுதியில் கடைகளை வைத்திருக்கும் சில வியாபாரிகள், அவற்றை களஞ்சிய அறைகளாக வாடகைக்கு விட்டுவிட்டு, நடைபாதைகளில் வியாபாரம் செய்வதால் பாதசாரிகளுக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளமை இங்கு அவதானிக்கப்பட்டது.

நடைபாதைகளை மறித்து வியாபாரம் செய்பவர்களை அகற்றுவதற்கும், நகரத்தின் நெரிசலைக் குறைப்பதற்கும் நகரசபைத் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் இதன்போது நடவடிக்கை எடுத்தனர்.

அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நகரசபைத் தலைவர் அசோக கருணாரத்ன, தற்போது சிதைவடைந்துள்ள பழைய சந்தையின் அனைத்துக் கடைகளும் விரைவாக நவீனமயமாக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தப் பணிகள் நிறைவடைந்ததும், அந்த இடம் மீன் மற்றும் இறைச்சி விற்பனைக்காக ஒதுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





# கற்பிட்டியின் ரோலர் மீன்பிடியின் தடையை நீக்குமாறு கோரிக்கை!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

ரோலர் படகு மீன்பிடி தொழில் கற்பிட்டி கடற்பரப்பில் மாத்திரம் தடை செய்யப்பட்டு நான்கு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் இன்றுவரை அத்தொழிலுக்கான அனுமதி வழங்காமல் இழுத்தடிப்பு செய்யப்படுகிறது. அதற்கான மாற்றுத் தொழில் ஏற்பாடுகள் எதுவும் கடந்த அரசால் மேற்கொள்ளப்படவில்லை. எனவே அதற்கான தடையை நீக்குங்கள் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரோலர் படகு மீன்பிடி தொழில் தடை காரணமாக பல கடற்தொழிலாளர்களின் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளன. ரோலர் படகு உரிமையாளர்களின் பல லட்சக் கணக்கான முதலீடுகளும் பாதிப்படைந்துள்ளது. இதனால் அவர்கள் நஷ்டமடைந்து கடனாளிகளாகியும் உள்ளனர். சில ரோலர் படகுகள் நீரில் மூழ்கி முற்றாக சேதமடைந்தும், இன்னும் பல டோலர் படகுகள் பகுதி அளவில் சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்த மீன்பிடி தடையானது கற்பிட்டி பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இறால், மீன் விலைகளும் அதிகரித்து காணப்படுகின்றன.

மேலும் கற்பிட்டி துறைமுகத்தின் வருமானமும் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், நீர்கொழும்பு போன்ற பகுதிகளில் ரோலர் படகு மீன்பிடி தொழில் தடையின்றி நடைபெறுவதாகவும் கற்பிட்டியில் மாத்திரம் ஏன் இத்தொழில் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயமாக கவனத்தில் எடுத்து கற்பிட்டி கடற்பரப்பில் ரோலர் படகு மீன்பிடி தொழிலுக்கான அனுமதியை பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் உதவி!



(மட்டு.துஷாரா, அபு அலா)

செங்கலடி கணபதி நகர் பகுதியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக வீடு மற்றும் அனைத்து பொருள்களும் முற்றாக எரிந்த நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு, சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தன் உதவிகளை வழங்கியுள்ளார்.

பலரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் பலர் உதவிகளை வழங்க முன்வந்ததுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அந்த வகையில் பிரதேச சபை உறுப்பினர் செ.நிலாந்தன் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு முதல் கட்டமாக சமையல் உபகரணங்கள், மின் விசிறி, ரைஸ் குக்கர், காஸ் அடுப்பு, நுளம்புவலை, பாடசாலை புத்தகப் பை, காலணி, உள்ளிட்ட பல பொருள்களை இன்று வழங்கினார்.





# கற்பிட்டி றோமன் கத்தோலிக்கவில் இடம்பெற்றது கால் கோள் நிகழ்வு

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புதிய பாடத் திட்டத்துடன் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத் துக்கு மாணவர்களைப் பாடசாலை களில் அனுமதிக்கும் கால் கோள் விழா நிகழ்வு கற்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் டபள்யூ.பீ சஹிலா தலைமையில் வியா ழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ. எம். ஜவாத் கலந்து கொண்டார். அத்தோடு கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தை, அருட் சகோதரி மற்றும் உப அதிபர் பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது முதலாம் தர மாணவர்களுக்கான திறன் வகுப்பறை மற்றும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக் கான கற்றல் வள நிலையம் என்பனவும் திறந்து வைக்கப்பட்டன.





# இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பும் தலையீடும்!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், பனிப்போரின் உச்சக்கட்ட காலத்தின்போதும், அதன் பின்னரும் இலத்தீன் அமெரிக்காவில் தொடர்ச்சியான இடதுசாரி அரசுகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த அரசுகள் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய ஆர்வத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க அரசால் நிதியுதவி செய்யப்பட்ட எதிர்ப்புரட்சி சதிகளை எதிர்கொண்டன.

வரலாற்று ரீதியாக இவற்றில் 1954 குவாத்தமாலா ஆட்சிக் கவிழ்ப்பு, 1964 பிரேசிலிய ஆட்சிக் கவிழ்ப்பு, 1973 சிலி ஆட்சிக் கவிழ்ப்பு மற்றும் 1976 ஆர்ஜென்டினா ஆட்சிக் கவிழ்ப்பு ஆகியவை அமெரிக்க சதித் திட்டங்களால் நிகழ்த்தப்பட்டன என்பதும் உலகறிந்ததே.

1960 – 1970களின் காலகட்டங்களின் போது, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்களின் தேர்தல் வழிப்பட்ட தீர்ப்புகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவங்கள் மதிப்பு அளித்தது இல்லை என்பதும் வரலாறே.

### ஆபரேஷன் கோண்டர் (Operation Condor)

இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கள் அனைத்தும், அமெரிக்க அரசின் ஆபரேஷன் காண்டரின் (Operation Condor) ஒரு பகுதியாக, அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ (CIA) ஆதரவுடன் கடும்போக்கு வலதுசாரி இராணுவ சர்வாதிகாரங்களால் இறையாண்மை உள்ள மக்களின் ஆட்சிகள் கைப்பற்றப்பட்டன.

அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ ஆதரவுடைய கடும்போக்கு வலதுசாரி சர்வாதிகார ஆட்சிகளில், சட்டவிரோத அரசியல் கைதுகள், சித்திரவதைகள், அரசியல் காணாமல் போதல் மற்றும் குழந்தை கடத்தல் உட்பட பல மனித உரிமை மீறல்களை செய்தன.

சர்வதேச அழுத்தத்தின் காரணமாக இந்த ஆட்சிகள் பலவும் வீழ்ச்சியடையத் தொடங்கின. இந்த வலதுசாரி அரசுகள் கொடூரமான அட்டூழியங்களில் ஈடுபட்டதன் காரணமாக இலத்தீன் பொது மக்கள் அமெரிக்காவுக்கு எதிராக போராடினர். பல இலத்தீன் நாடுகள் மறைமுக போரை எதிர்கொண்டன என்பது வரலாற்று உண்மையாகும்.

### வெனிசுலா இறையாண்மை மீறல்

வெனிசுலாவின் தலைநகர் கராகஸில் கடந்த சனிக்கிழமை அதிகாலை ஏழு இடங்களில் அமெரிக்க இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. இந்த நிலையில், வெனிசுலா நாட்டின் அதிபரும், அவரது மனைவியும் நாடு கடத்தப்பட்டதாக டிரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார்.

தங்கள் நாட்டின் இறையாண்மையை மீறி வெனிசுலாவில் இராணுவ நிலைகள் மீது அமெரிக்கா குண்டுவீச்சு நடத்தியதாக குற்றம் சாட்டியுள்ளது. வெனிசுலா அரசு தற்போது தேசிய அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

ஜனவரி 3, 2026 சனிக்கிழமை கராகஸில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு, வெனிசுலாவின் மிகப்பெரிய இராணுவ வளாகமான ஃபுர்டே டியுனாவில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. அத்துடன் கராகஸில் விமான நிலையத்தில் பாரிய குண்டு வெடிப்புகள் ஏற்பட்டன.




### அமெரிக்கா குண்டுவீச்சு

கரீபியன் கடலில் கடற்படை பணிக்குழுவை அனுப்பியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், வெனிசுலா மீது தரைவழித் தாக்குதல்கள் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை எழுப்பியதன் பின்னர் இந்த தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன.

கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை கராகஸில் பலத்த குண்டு வெடிப்புகள் மற்றும் தாழப் பறக்கும் விமானங்கள் காணப்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஃபுயர்ட் டியூனா (Fuerte Tiuna) இராணுவத் தளம் மற்றும் லா கார்லோட்டா (La Carlota) விமானத் தளம் உட்பட முக்கிய இராணுவ நிலைகளில் புகைமண்டலம் காணப்பட்டது என்று நேரில் கண்ட சாட்சிகள் தெரிவிக்கின்றன.

தலைநகர் கராகஸிலும், மிராண்டா, அரகுவா மற்றும் லா குய்ரா மாநிலங்களிலும் தாக்குதல்கள் நடந்தன என்று அரசு கூறியுள்ளது. வெனிசுலாவின் எண்ணெய் மற்றும் கனிம வளங்களைக் கைப்பற்றும் முயற்சியில் வாஷிங்டன் இந்த தாக்குதலை நடத்தியதாகவும் வெனிசுலா அரசு குற்றம் சாட்டியுள்ளது.

### இலத்தீன் நாடுகளில் அமெரிக்க தலையீடு

நீண்ட காலமாக இலத்தீன் நாடுகளில் அமெரிக்க தலையிட்டு வருகிறது. குவாத்தமாலாவில் 1954 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஜேக்கபோ அர்பென்ஸ் குஸ்மான் அமெரிக்க நிறுவன நலன்களைப் பாதிக்கும் நில சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, பல தசாப்தங்களாக உறுதியற்ற தன்மை மற்றும் இராணுவ ஆட்சிக்கு வழிவகுத்த பின்னர், அவரைக் கவிழ்த்த ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை சிஐஏ ஆதரித்தது.

அதன் பின்னர் 1959 இல் கியூபா பிடல் காஸ்ட்ரோ சர்வாதிகாரி ஃபுல்ஜென்சியோ பாடிஸ்டாவை தூக்கியெறிந்த பிறகு, அமெரிக்கா அவரை நீக்க முயன்றது, இது 1961 இல் சிஐஏ ஆதரவுடன் பே ஆஃப் பிக்ஸ் படையெடுப்பில் தோல்வியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அமெரிக்கா கம்யூனிச எதிர்ப்பு சக்திகளையும் அமெரிக்க ஆதரவு அரசியல்வாதிகளையும் பிரேசில் 1964இல் ஆதரித்தது. ஆனால் ஜனாதிபதி ஜோவா கவுலார்ட்டை அகற்றி 1985 வரை நீடித்த ஒரு சர்வாதிகாரத்தை நிறுவிய இராணுவ சதித்திட்டத்திற்கு வழி வகுக்க அமெரிக்க உதவியது.

அத்துடன் 1965 டொமினிகன் குடியரசு இடதுசாரி

தொடர்ச்சி▼

# இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பும் தலையீடும்!

**தொடர்ச்சி▲**

ஜனாதிபதி ஜ/வான் போஸ் திரும்புவதைத் தடுக்க அமெரிக்க துருப்புக்கள் படையெடுத்து, "இரண்டாவது கியூபா" குறித்த அச்சங்களைக் காரணம் காட்டி, அமெரிக்காவுடன் இணைந்த அரசை நிறுவ உதவியது.

அமெரிக்க ஆதரவுடன் கூடிய கம்யூனிச எதிர்ப்பு முயற்சிகள் ஈக்வடார் நாட்டில் 1961-1963 அரசியல் கொந்தளிப்புடன் ஒத்துப்போனது. அது ஒரு இராணுவ சதித்திட்டத்துடன் முடிவடைந்தது. கியூபாவுடனான உறவுகளைத் துண்டித்து, அதன் விளைவாக நாட்டை வாசிங்டனுடன் மிகவும் நெருக்கமாக இணைத்தது.

1964-1970 போலிவியாவில் விக்டர் பாஸ் எஸ்டென்சோரோ உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு எதிரான ஆட்சிக் கவிழ்ப்புகளை சிஐஏ ஆதரித்தது, பின்னர் அமெரிக்க நிறுவனங்களை தேசியமயமாக்கிய பின்னர் ஜனாதிபதி ஜ/வான் ஜோஸ் டோரஸை குறைமதிப்புக்கும் உட்படுத்தியது.

கம்யூனிச எதிர்ப்பு முயற்சிகள்

அமெரிக்க பாதுகாப்பு உதவி மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்புடன் உருகுவேயில் 1960 - 1973களில் இராணுவ சர்வாதிகாரத்திற்கு முன்னதாக இடதுசாரி குழுக்களை அடக்குவதை ஆதரித்தது.

மேலும் சிலி ஜனாதிபதி சால்வடார் அலெண்டேவுக்கு எதிரான எதிர்க்கட்சி முயற்சிகளுக்கு 1970-1973 சிஐஏ நிதியளித்தது. இது 1973 இல் அகஸ்டோ பினோசேவின் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கும் 17 ஆண்டு அமெரிக்க ஆதரவுடன் சர்வாதிகாரத்துக்கும் வழிவகுத்தது.

1976 அர்ஜென்டினா "டர்ட்டி போரின்" போது பரவலான சித்திரவதை மற்றும் காணாமல் போனதற்குப் பொறுப்பான ஆட்சியை ஆதரித்து, அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவ ஆட்சிக்குழுவை அமெரிக்கா ஆதரித்தது. எல் சால்வடார் உள்நாட்டுப் போரின் போது அமெரிக்கா பெருமளவில் இராணுவ உதவியை அதிகரித்தது. 1981 எல் மொசோட் படுகொலை போன்ற அட்டூழியங்களுக்குப் பொறுப்பான படைகளை ஆதரித்தது.

பனிப்போர் காலத்தில் 1980 நிகரகுவா ஈரான்-கான்ட்ரா இரகசிய நடவடிக்கை உட்பட, சாண்டினிஸ்டா அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் கான்ட்ரா கிளர்ச்சியாளர்களை அமெரிக்கா ஆதரித்ததும் குறிப்பிடத்தக்கது.

கிரெனடா உள்நாட்டு அமைதியின்மைக்குப் பிறகு, மார்க்சிய ஆட்சி மற்றும் கியூப செல்வாக்குக் குறித்த கவலைகளைக் காரணம் காட்டி அமெரிக்கா 1983 படையெடுத்தது, மேலும் அரசை அமெரிக்காவுடன் இணைந்த நிர்வாகத்தால் மாற்றியது.

1989 இல் பனாமா இராணுவ ஆட்சியாளர் மானுவல் நோரிகாவை அகற்ற அமெரிக்கப் படைகள் பனாமா மீது படையெடுத்தன, அவரது சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பனாமா கால்வாய் மண்டலத்தில் அமெரிக்காவின் செல்வாக்கை மீண்டும் உறுதிப்படுத்தின.

தற்போது வெனிசுலா மீதான அமெரிக்காவின் தாக்குதல், அதன் நாட்டின் அதிபரை கடத்தியதை எந்த வகைக்குள் அடக்கலாம் என்று தெரியவில்லை. 2026 வெனிசுவேலாவில் பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தி இந்த பொருளாதார நலிவை அமெரிக்கா வெனிசுலாவுக்கு எதிராக உலக நாடுகள் மத்தியில் பிரச்சாரப்படுத்தி வருகின்றது. இதன் மூலம் தனது தாக்குதலுக்கான நியாயங்களை கற்பிக்கவும் முயலுகின்றது. கடந்த காலங்களில் அமெரிக்கா இவ்வாறன செயற்பாடுகளை பல நாடுகள் மீது செய்தும் இருக்கின்றது அதன் ஒரு தொடர்ச்சிதான் இது.

**எண்ணை வளத்தை சூறையாடும் அமெரிக்கா**


உலகின் அதி உயர் எண்ணை வளத்தை சூறையாடுவதே அமெரிக்காவின் இந்தத் தாக்குதலின் முக்கிய நோக்கம். இதற்கு அப்பால் அதன் கனிம வளங்களைச் சூறையாடுவற்கு அந்த நாட்டை தன் வசப்படுத்துவது அல்லது அதற்கு ஏற்ற தனது பொம்மை அரசை அங்கு நிறுவுவதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

இடதுசாரி கொள்கையின் அடிப்படையில் ஆட்சி நடத்தும் வெனிசுவேலா மீதான தாக்குலை நடத்துவதற்கான அரசியல் காரணமும் இங்கு பிரதானமானது. வெனிசுலா அரசு ஒரு காலத்தில் அமெரிக்க தனியார் கம்பனிகள் வசம் இருந்த தமது எண்ணை வளங்களை நாட்டின் வளங்களை தனியார் உடமையில் இருந்து அரசுடமையாக்கி மக்களுக்கு சமமாக பகிரும் பொதுவுடமையாக்கியது.

இந்தச் செயற்பாட்டை வெனிசுவேலா செய்திருப்பது அமெரிக்காவின் பாரிய வெறுப்புக்கு வெனிசுலா உள்ளானதற்கு காரணமாகியும் இருக்கின்றது. கடந்த சில மாதங்களாக வெனிசுலாவுக்கு அண்மையாக அமைந்த கரீபியன் கடற்பரப்பில் பல எண்ணைக் கப்பல்களை அழித்துவரும் அமெரிக்கா அதனைத் தொடர்ந்து இத்தாக்குதலை செய்திருக்கின்றது. மிக நீண்ட காலமாக அமெரிக்கா வெனிசுலா மீது பொருளாதாரத் தடையை தனது நட்பு நாடுகளுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

# இன நல்லிணக்கத்தை மேம்படுத்த அக்கறை!

## அமைச்சர் சந்தன தெரிவிப்பு



இன நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது என்று பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இலங்கையின் 78ஆவது சுதந்திர தின விழாவுக்குரிய ஏற்பாடுகள் தற்போது துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

"உண்மையான சுதந்திரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிலையான சமாதானம் அவசியம். இதற்கு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படாமல் எம்மால் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது.

நாட்டில் மீண்டும் இனவாத மோதல் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது. தேசிய சமத்துவம் கட்டியெழுப்பப்படும். உண்மையான சுதந்திரம் நிலைநிறுத்தப்படும். சிறப்பானதொரு நாட்டை உருவாக்கவும், வளமானதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்." - என்றார்.

# மகாராஷ்டிரா விமானத்தின் கறுப்பு பெட்டி கண்டுபிடிப்பு

மகாராஷ்டிராவில் இடம்பெற்ற விமான விபத்தில் துணை முதல்வர் அஜித் பவார் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்கான காரணத்தை கண்டறிய மத்திய விமான போக்குவரத்து துறை உயர்நிலை விசாரணை நடத்த வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், மத்திய விமான போக்குவரத்து துறைக்கு கடிதம் அனுப்பினார்.

இந்த கடிதத்துக்கு பதில் அளித்து முதல்வர் பட்னாவிஸுக்கு மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு நேற்று அனுப்பிய கடிதத்தில்,

“விமான விபத்து தொடர்பாக மத்திய விமான போக்குவரத்து துறையின் கீழ் இயங்கும் விமான விபத்து புலனாய்வு பிரிவு (ஏ.ஏ.ஐ.பி) ஏற்கெனவே விசாரணையை தொடங்கிவிட்டது. ஏ.ஏ.ஐ.பி. மற்றும் டி.ஜி.சி.ஏ. புலனாய்வு குழுக்கள் விமான விபத்து நேரிட்ட இடத்தில் ஆய்வு நடத்தி உள்ளன. கறுப்பு பெட்டி மீட்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

விமான விபத்து தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் விசாரணை நடத்தப்படும். தொழில்நுட்ப தரவுகள், விமானத்தின் இயக்கம், விபத்து நேரிட்ட பகுதி என அனைத்து கோணங்களிலும் விசாரணை நடத்தப்படும். எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகாராஷ்டிர அரசு கோரிக்கை விடுத்திருக்கிறது. இதை கவனமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.



விமான விபத்து குறித்து விரைவாக விசாரணை நடத்த மகாராஷ்டிர மாநில அரசின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். குறிப்பாக உள்ளூர் நிர்வாகம், எங்களது புலனாய்வு அமைப்புகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் அஜித் பவார் பயணம் செய்த லியர் ஜெட் 45 விமானம் விபத்துக்குள்ளானது குறித்து விமான விபத்து புலனாய்வு அலுவலகம் (ஏ.ஏ.ஐ.பி) விசாரணையை தொடங்கியுள்ளது.

விசாரணை விரைவாக நடைபெறுவதாகவும், விமானத்தின் கருப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளதாகவும் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதில் உள்ள தகவல்கள் வெளியான பின்பு, விமான விபத்துக்கான காரணம் தெரியவரும்.

விமான விபத்து விசாரணைக்காக டி ல்லி மற்றும் மும்பையில் இருந்து சென்ற ஏ.ஏ.ஐ.பி. அதிகாரிகள் விபத்து நடந்த இடத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.

# காங்கிரஸுடன் தி.மு.கவிற்கு எந்தவித மோதலும் இல்லை

## கனிமொழி எம்.பி.தெரிவிப்பு

காங்கிரஸ் உடன் தி.மு.கவுக்கு எந்த மோதலும் இல்லை. உறவு சுமுகமாகவே உள்ளது என்று கனிமொழி எம்.பி தெரிவித்துள்ளார்.

2026 சட்டமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கருத்து கேட்பு கூட்டம் நெல்லை சந்திப்பில் உள்ள தனியார் விடுதியில் குழு தலைவரும் தி.மு.க. துணை பொதுச் செயலாளருமான கனிமொழி எம்.பி தலைமையில் நடைபெற்றது.



இதில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த வணிகர்கள் சங்கம், விவசாயிகள், தொழிலாளர்கள், பல்வேறு பொதுநல அமைப்புகள், அரசு ஊழியர் சங்கங்கள் ஆகியோர் கோரிக்கை மனுக்களை குழுவிடம் அளித்தனர். பின்னர் கனிமொழி கருத்து தெரிவிக்கையில்,

“தி.மு.க. தேர்தல் அறிக்கையின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை மனுக்களாகத் தந்து வருகிறார்கள்.

ஒரு வாக்குறுதியைக் கொடுத்தால், அதை நிச்சயம் நிறைவேற்றக் கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

அடுத்து அமையப்போவது தி.மு.க. ஆட்சிதான் என்கிற நம்பிக்கையோடுதான் மக்கள் மனுக்களைத் தருகிறார்கள். நிச்சயமாகப் புதிய கட்சிகள் கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அவ்வாறு எந்தக் கட்சி வரும், யாரை இணைப்பது என்பதைப் பற்றிய முடிவை முதல்வர்தான் அறிவிப்பார்.

எந்தக் கருத்துக் கணிப்பு வந்தாலும், வராவிட்டாலும் தேர்தல் களம் என்பது திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குச் சாதகமாக இருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

ராகுல் காந்தியுடனான பேச்சு வார்த்தை மிகவும் சுமுகமாக இருந்தது. கூட்டணியை நான் உறுதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், கடந்த பல ஆண்டுகளாகவே காங்கிரஸ் இயக்கத்தோடு தி.மு.க. கூட்டணியில்தான் இருந்து வருகிறது. எங்களுக்குள் எந்த மோதல் போக்கும் இல்லை. உறவு சுமுகமாகவே உள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.





# பாரியளவு சரிவைச் சந்தித்தது அமெரிக்க டொலரின் பெறுமதி

கடந்த 2025 ஆம் ஆண்டில் ஒரு தசாப்த காலப்பகுதியில் இல்லாத வாறு பாரிய சரிவைச் சந்தித்த அமெரிக்க டொலரின் பெறுமதி, 2026ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், ஏனைய சர்வதேச பிரதான நாணயங்களுக்கு எதிராக டொலர் நிலை குலைந்துள்ளதாக பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை நிலவரப்படி, டொலரின் பெறுமதி 1.3 வீதத்தால் சரிந்துள்ளதாகவும், இதன்படி, 2026ஆம் ஆண்டு ஆரம்பித்து ஒரு சில நாள்களிலேயே டொலர் 2.6 வீத ஒட்டுமொத்த வீழ்ச்சியைக் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது கடந்த 2025ஆம் ஆண்டில் மட்டும் டொலரின் பெறுமதி 9.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்துள்ளதாக கூறப்படுகின்றது.

டொலரின் இந்த வீழ்ச்சி காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் 'யூரோ' நாணயம், 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக 1.2 டொலர் எனும் உயர் எல்லையைத் தொட்டுள்ளது.

அதேபோல் பிரித்தானிய பவுண்ட் மற்றும் ஜப்பானிய யென் ஆகிய நாணயங்களும் டொலருக்கு எதிராக அண்மைக்கால உச்சத்தைப் பதிவு செய்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கணிக்க முடியாத பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக முதலீட்டாளர்கள் டொலர் மீது நம்பிக்கை இழந்து வருவதே இந்தத் தொடர் சரிவுக்குக் காரணம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் ஏற்றுமதி மற்றும் உற்பத்தித் துறையை ஊக்குவிப்பதற்காக டொலரின் பெறுமதியைத் திட்டமிட்டு குறைக்க ஜனாதிபதி ட்ரம்ப் விரும்புவதாகவும் ஒரு கருத்து நிலவுகின்றது.

இது குறித்துக் கேட்கப்பட்ட போது, "இல்லை, இது மிகச் சிறந்தது என்றே நான் நினைக்கிறேன்" என ட்ரம்ப் பதிலளித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# மெலானியா ட்ரம்புக்கு ரகசிய கடிதம் அனுப்பின்னர் ரஷ்ய ஜனாதிபதி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் மனைவியும், அமெரிக்காவின் முதல் பெண்மணியுமான மெலானியா ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடமிருந்து தமக்குக் கிடைத்த கடிதம் குறித்து முதன்முறையாகப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அவரது சுயசரிதை புத்தகமான 'Melania' இன் புதிய பதிப்பில் இது தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளன 2018 ஆம் ஆண்டு ஹெல்சின்கியில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அமெரிக்க - ரஷ்ய உச்சிமாநாட்டிற்குப் பிறகு, ஜனாதிபதி புடின் மெலானியாவுக்கு இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

அந்த மாநாட்டின் போது மெலானியா காட்டிய விருந்தோம்பல் மற்றும் கௌரவத்திற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவே இந்தக் கடிதம் அமைந்திருந்தது. ஜனாதிபதி புடின் மிகவும் நாகரீகமாகவும் கௌரவமாகவும் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார் என மெலானியா குறிப்பிட்டுள்ளார்.

மாநாட்டின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாகவும், அதில் மெலானியாவின் பங்கு முக்கியமானது என்றும் புடின் அதில் பாராட்டியிருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

ட்ரம்ப் அரசாங்கத்திற்கும் ரஷ்யாவுக்கும் இடையில் இரகசியத் தொடர்புகள் இருந்ததாக நீண்டகாலமாகக் குற்றச்சாட்டுகள் எழுந்து வரும் நிலையில், மெலானியா இந்தக் கடிதத்தை இப்போது வெளிப்படுத்தியிருப்பது அரசியல் களத்தில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

குறிப்பாக, ரஷ்யாவுடனான உறவுகளை ட்ரம்ப் கையாண்ட விதம் குறித்து இப்போதும் விமர்சனங்களும் எழுந்துள்ளது.

உலகத் தலைவர்களுக்கிடையிலான இவ்வாறான கடிதப் பரிமாற்றங்கள் சாதாரணமான ராஜதந்திர நடைமுறைகள் என மெலானியா தரப்பு வாதிடுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# டொனால்ட் ட்ரம்பின் எதிர்ப்புக்கு மத்தியில் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் ஷாங்காய் விஜயம்

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான சீன நிறுவனங்களுக்கு வணிக வாய்ப்புகளை அதிகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இங்கிலாந்துப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் சீனாவின் நிதி மையமான ஷாங்காயை சென்றடைந்துள்ளார்.

பெய்ஜிங் மற்றும் லண்டனுக்கு இடையிலான எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவித்த சில மணி நேரங்களுக்குப் பின்னர் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

8 ஆண்டுகளின் பின்னரான இங்கிலாந்துப் பிரதமரின் முதல் சீனப் பயணத்தின் போது ஸ்டார்மர் பெய்ஜிங்கில் ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட சீனத் தலைவர்களைச் சந்தித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே பல வருடங்களாக நீடித்த பிளவுகளுக்குப் பின்னர் உறவுகளை மீண்டும் மேம்படுவதற்கான அடையாளமாகக் கருதப்படும் நீண்டகால, நிலையான மூலோபாய கூட்டாண்மையைத் தொடர இதன்போது இருவரும் உறுதியளித்துள்ளனர்.

பெய்ஜிங் மற்றும் லண்டனுக்கு இடையிலான எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எதிர்ப்பு வெளியிட்டுள்ளதுடன், சீனாவுடன் வர்த்தகம் செய்வது இங்கிலாந்துக்கு மிகவும் ஆபத்தானது என்றும் கூறியுள்ளார்.

# நிபா வைரஸ் பரவும் ஆபத்து இந்தியாவிலிருந்து குறைவு

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்


மேற்கு வங்காளத்தில் இரண்டு நிபா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இந்தியாவில் இருந்து நிபா வைரஸ் பரவுவதற்கான ஆபத்து குறைவாக உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் இன்று தெரிவித்துள்ளது.

இதனால், எந்தவொரு வர்த்தக அல்லது பயண கட்டுப்பாடுகளையும் பரிந்துரைக்கவில்லை என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு அறிக்கையில் உறுதிபடுத்தியது.

ஹொங்கொங், தாய்லாந்து, தாய்வான், மலேசியா, சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் நேபாளம் உள்ளிட்ட பல நாடுகள் நிபா வைரஸ் தொற்றுகள் குறித்த அறிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக கொவிட் பாணி சுகாதார பரிசோதனை நடவடிக்கைகளை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ள நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இந்த அறிக்கை வந்துள்ளது.

மேற்கு வங்காளத்தில் இந்த மாதம் இரண்டு நிபா வைரஸ் தொற்றாளர்கள் இந்தியாவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

நோயாளிகள் இருவரும் 25 வயது



தாதியர்கள் ஆவர்.

ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் தாதி யர்களான அவர்கள் வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள பராசத்தில் உள்ள ஒரே தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிகின்றனர்.

2025 டிசம்பர் மாத கடைசி வாரத்தில் அவர்களுக்கு நிபா வைரஸ் தொற்று அறிகுறிகள் தோன்றின, அது விரைவாக நரம்பியல் சிக்கல்களாக மாற்றமடைந்து 2026 ஜனவரி தொடக்கத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

பின்னர் ஜனவரி 13 ஆம் திகதி புனேவில் உள்ள தேசிய வைரஸ் ஆய்வு நிறுவனத்தால் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

ஜனவரி 21 ஆம் திகதி நிலவரப்படி, ஆண் நோயாளி குணமடைந்து வருவதாகவும், பெண் நோயாளி இன்னும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை மேலும் கூறியது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 30/01/2026

ஆண்டுக்கு சுமார் 4 நாள்களை வீதியில் இழக்கும் சாரதிகள்



03



## கனடாவிடமிருந்து விடுதலை வேண்டும்:

# ஆல்பர்ட்டா மாகாண பிரதிநிதிகள் அமெரிக்க அதிகாரிகளுடன் சந்திப்பு

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணம், கனடாவிலிருந்து விடுதலை வேண்டும் என கோரிவருகிறது.

இந்நிலையில், ஆல்பர்ட்டா மாகாண பிரதிநிதிகள், ட்ரம்ப் நிர்வாக அதிகாரி களை சந்தித்துள்ள விடயம் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

1930,40 களிலிருந்தே, ஆல்பர்ட்டா மாகாணத்தில் கனடாவிலிருந்து பிரிய வேண்டும் என்னும் குரல்கள் ஒலித்து வருகின்றன.

2025 இல் இடதுசாரிக் கொள்கைகள் கொண்ட லிபரல் கட்சியின் மார்க் கார்னி பிரதமரானதைத் தொடர்ந்து, அவரது கொள்கைகள் ஆல்பர்ட்டாவின் பாரம் பரியக் கொள்கைகளுக்கு நேரெதிராக உள்ளதால், ஆல்பர்ட்டா மாகாணம் கனடாவிலிருந்து பிரியவேண்டும் என மீண்டும் குரல்கள் வலுக்கத் துவங்கி யுள்ளன.

02








# கனடாவில் நகைக்கடையில் கொள்ளை; 5 சந்தேகநபர்களை தேடும் பொலிஸ்

கனடாவின் பர்லிங்டன் பகுதியில் உள்ள ஒரு நகைக்கடையில் நடைபெற்ற கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய 05 சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மேபல்வில் மால் வணிக வளாகத்திலுள்ள மிச்சல் ஹில் நகையகத்தில் கடையில் இடம் பெற்றுள்ளது.

பொலிஸ் தகவலின்படி, நான்கு சந்தேகநபர்கள் கடைக்குள் நுழைந்து சுத்தியலால் பல காட்சிப்பெட்டிகளை உடைத்தனர்.

அதனைத் தொடர்ந்து பல நகைகளை கைப்பற்றிய அவர்கள், வெளியே காத்திருந்த ஐந்தாவது நபர் செலுத்திய ஹொண்டா சிவிக் காரில் தப்பிச் சென்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ நேரத்தில் வணிக வளாகத்துக்குள் துப்பாக்கிச் சத்தம் கேட்டதாக ஆரம்ப தகவல்கள் கிடைத்தன.

ஆனால் விசாரணையில், கண்ணாடி காட்சிப்பெட்டிகளை சுத்தியலால் உடைத்தபோது ஏற்பட்ட சத்தமே அது என்று உறுதி செய்யப்பட்டது.

எந்தத் துப்பாக்கியும் பயன்படுத்தப்படவில்லை எனவும் இந்த சம்பவத்தில் யாரும் காயமடையவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் பயன்படுத்தியதாக கருதப்படும் வாகனத்தின் படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இந்த சமப்வம் தொடர்பில் தகவல்கள் உடையவர்கள் அவற்றை பொலிஸாருடன் பகிருமாறு கோரப்பட்டுள்ளது.

# டொராண்டோவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

2025 ஆம் ஆண்டில் கனடாவின் டொராண்டோ நகரத்திற்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் திரண்டுள்ளனர்.

சுங்க வரிகள், பணவீக்கம் மற்றும் பரவலான பொருளாதார சவால்கள் இருந்தபோதிலும் இவ்வாறு அதிகளவு பயணிகள் திரண்டுள்ளனர்.

Destination Toronto வெளியிட்ட புதிய அறிக்கையின்படி, உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் சாதனை எண்ணிக்கையிலான பயணிகள் நகரைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு மொத்தம் 28.2 மில்லியன் பேர் டொராண்டோவை சுற்றுலா தலமாகத் தேர்வு செய்துள்ளனர்.

இதன் மூலம் 9.1 பில்லியன் டாலர் செலவினம் உருவாகியுள்ளது. அதில் 36 வீத அமெரிக்கா மற்றும் பிற சர்வதேச சந்தைகளிலிருந்து வந்ததாக அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த சுற்றுலா வருகைகள் நகர பொருளாதாரத்திற்கு சுமார் 13.5 பில்லியன் டொலர் வருவாயை உருவாக்கி, 2024 ஐ விட 4 வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

2025ல் அதிக வளர்ச்சி கண்ட பகுதி சர்வதேச சுற்றுலாப் பயணிகளாகும். இந்த வருகைகள் 8 வீதம் உயர்ந்து 1.4 மில்லியன் ஆகிவிட்டன.



குறிப்பாக ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகள் முறையே 12 வீதம் மற்றும் 10 வீதம் உயர்வைக் கண்டுள்ளன.

அதேவேளை, கனடாவின் பிற பகுதிகளிலிருந்து வந்தவர்கள் 25 மில்லியனாக இருந்து, கடந்த ஆண்டைவிட 3 வீதம் அதிகரித்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து வந்த பயணிகள் 2024ஐ விட 6 வீதம் குறைந்திருந்தாலும், 1.9 மில்லியன் எண்ணிக்கையுடன் இரண்டாவது பெரிய சுற்றுலா பிரிவாக காணப்பட்டுள்ளனர்.

## ஆல்பர்ட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆல்பர்ட்டா மாகாணம், இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு மாகாண மாகும்.

ஆனால், கனடாவுக்கு தாங்கள் தங்கள் வளம் மூலம் பெரிய அளவில் பங்களிப்பைச் செய்தும், பதிலுக்கு ஃபெடரல் அரசு தங்களை சரியாக கவனிப்பதில்லை, தங்கள் கருத்துக்கள் நாடாளுமன்றத்தில் எடுபடவில்லை என்னும் கருத்து ஆல்பர்ட்டா மக்களிடையே நிலவிவருகிறது.

ஆகவே, வளம் நிறைந்த ஆல்பர்ட்டா, கனடாவிலிருந்து பிரிந்து தன்னைத்தான் நிர்வகிக்கவேண்டும் என ஆல்பர்ட்டா மக்களில் ஒரு பிரிவினர் கருதுகிறார்கள்.

இந்நிலையில், ஆல்பர்ட்டா மாகாணம் கனடாவிலிருந்து பிரியவேண்டும் என்னும் கருத்து கொண்ட அமைப்பின் பிரதிநிதிகள் சிலர், அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்பின் நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரை சமீபத்தில் சந்தித்ததால் கனடாவில் பரபரப்பு உருவாகியுள்ளது.

அந்த தகவல் வெளியானதைத் தொடர்ந்து, கனேடிய மாகாணங்களின் பிரீமியர்களின் சந்திப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார் கனடா பிரதமரான மார்க் கார்னி.

மாகாண பிரீமியர்களின் சந்திப்புக்குப் பின் ஊடகவியலாளர்களிடம் பேசிய பிரதமர் மார்க் கார்னியிடம் வெளிநாட்டு தலையீடு குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்ப, அமெரிக்கா கனடாவின் இறையாண்மையை மதிக்கவேண்டும் என்று கூறியுள்ளார் கார்னி.

ஆக, ஏற்கனவே கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைக்கப்போவதாக ட்ரம்ப் கூறிக்கொண்டிருக்கும் நிலையில், ஆல்பர்ட்டா பிரிவினைவாதிகள் ட்ரம்ப் நிர்வாகிகளை சென்று சந்தித்துள்ளதால், கனடா அரசியலில் பரபரப்பு உருவாகியுள்ளது.



# ஆண்டுக்கு சுமார் 4 நாள்களை வீதியில் இழக்கும் சாரதிகள்

கடந்த ஆண்டு முழுவதும், டொராண்டோ நகரில் சாரதிகள் போக்குவரத்து நெரிசலில் சிக்கியதால் சுமார் நான்கு நாள்களுக்கு சமமான நேரத்தை இழந்துள்ளனர் என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

டொம்டொம் வெளியிட்டவருடாந்த போக்குவரத்து நெரிசல் சுட்டி அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் அதிக நெரிசல் கொண்ட நகரங்களின் பட்டியலில் டொராண்டோ இரண்டாவது இடத்தை வகிக்கின்றது என்பதுடன், இந்த வரிசையில் வான்கூவர் முதலிடத்தில் உள்ளது.

2025 ஆம் ஆண்டில் நெரிசலான நேரங்களில் டொராண்டோ சாரதிகள் மொத்தமாக 100 மணிநேரம் (4 நாள்கள் மற்றும் 4 மணி நேரம்) இழந்துள்ளனர். இது 2024 ஐ விட 3 மணி 50 நிமிடங்கள் அதிகமாகும்.

எனினும், 2023 இல் வட அமெரிக்காவின் மிக மோசமான போக்குவரத்து நகரமாக இருந்த டொராண்டோவில் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக டொராண்டோ பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

“இது முழுமையான முன்னேற்றம் என்று அர்த்தமில்லை. ஆண்டுக்கு 100 மணி நேரம் இழப்பது பயணிகளின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதாரத்தையும் பாதிக்கிறது,” என்று அந்த நிறுவனத்தின் இயக்குநர் மாட்டி சியெமியாட்டிக்கி தெரிவித்தார்.



# கனடாவில் பழங்குடியின மக்கள் வாழும் கிராமத்தில் துப்பாக்கிச் சூடு; 2 பேர் பலி!

கனடாவின் கியூபெக் மாகாணத்தின் வடக்கு பேய் ஜேம்ஸ் நகராட்சியில் அமைந்துள்ள மிஸ்ஸிடின்ஸி பழங்குடியின கிராம பகுதியில் துப்பாக்கிச்சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரண்டு ஆண்கள் கொல்லப்பட்டனர். இதனால் குறித்த பகுதியில் அவசர முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத்துக்குள் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் 30 வயதிற்குட்பட்ட இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுளள்ன.

ரிவர்சயிட் தெருவில் பல துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டதாக தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

இந்த சம்பவம் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடாக இருக்கலாம் எனுவும் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச் செயலாக இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமூக உறுப்பினர்களின் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி கிராமத்தை முடக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அனைத்து குடியிருப்பாளர்களும் அடுத்த அறிவிப்பு வரும் வரை வீடுகளுக்குள் தங்கியிருந்து கதவுகளை பூட்டிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

கட்டடங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் மற்றும் பிற வசதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

மேலும், கிராமத்திற்குள் நுழைவும் வெளியேறும் பயணங்களும் கட்டுப்படுத்தப்பட்டன.